ஏழாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு.

*10588—திரு. சா. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அண்மையில் மோரிசு நாட்டில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தமிழக அரசு அதிகாரப் பூர்வமாக பங்கு கொண்டதா ?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசின் பங்கு எந்த வகையில் அமைந்தது ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மோரிசுத் தீவில் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாள் முதல் 8 ஆம் நாள்வரை நடைபெற்ற ஏழாம் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொள்ள பெருமக்கள் பன்னிருவரையும், கலைக் குழுவையும், அன்பளிப் புப் பொருள்களையும் தமிழக அரசு அனுப்பியது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோரிசு நாட்டில் நடைபெற்ற 7-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில், முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொள்ளவில்லையே என்ற ஒரு ஆதங்கம் அங்கே வாழுகின்ற ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு ஏற்பட்டது என்பது தமிழக அரசிற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, கலைஞர் அவர்கள் ஒரு முதலமைச்சராக பல பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிற காரணத்தால் பல நேரங்களில் பலர் அவர்களுடைய வருகையை விரும்புகிறபோது அந்த நேரத்தில் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படுவதில்லை. இவை தவிர்க்க முடியாதவை.

திரு. குமரி அ நந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு என்று சொல்கின்ற வகையிலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்று சொல்கின்ற வகையிலும் தமிழகத்திலே இருந்து ஆளும்கட்சியின் சார்பிலும், எதிர்க்கட்சியின் சார்பிலும் இருக்கின்ற தமிழ் ஆர்வலர்களும் கூட அழைக்கப்படுவதுண்டு. சென்ற முறை அந்த 12 பேர்களிலே அப்படி யாராவது அழைக்கப்பட்டார்களா ?

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தமிழ் மாநாடு என்ற அடிப்படையில் தமிழ் அறிஞர்களாக உள்ளவர்கள்தான் பெரும்பாலும் அனுப்பப்பட்டார்கள். அரசியல் கட்சி அடிப்படையில் ஆளும் கட்சி சார்பிலேயோ, எதிர்க் கட்சி சார்பிலேயோ யாரையும் அனுப்பவில்லை. இரண்டாவது, அவர்கள் அந்த மாநாட்டிற்கான முன்னேற்பாடுகளும், தகுந்த முயற்சிகளும் முதலில் மேற்கொள்ளவில்லை. மேற்கொண்டு இருப்பார்களேயானால், ஒரு வேளை அப்படி எல்லாம் எண்ணிப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

சேலம் இரும்பாலை.

*807—திரு. வ. முல்லைவேந்தன் திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உருட்டாலையாக உள்ள சேலம் இரும்பாலையை உருக் காலையாக மாற்ற மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

தற்போது, முதல் கட்டமாக, ஒரு உருட்டு ஆலையாக மட்டும் செயல்பட்டு வரும் சேலம் இரும்பு ஆலையை, ஒருங் கிணைந்த முழு அளவிலான உருக்காலையாக மாற்ற வேண்டு மென, மைய அரசை வலியுறுத்தி இவ்வரசு பலமுறை கடிதங்கள் மூலமும், நேரிலும் தெரிவித்து வந்துள்ளது. அதன் விளை வாக, இவ்வாலையின் உற்பத்தித் திறனை ரூ. 69.37 கோடி செலவில் இரு மடங்காக ஆக்குவதற்கு மைய அரசு தீர்மானித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், சேலம் உருக்காலை விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக வெப்பமுறை உருட்டு வசதிகள் அளிக்கும் திட்டத்தை எட்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மைய அரசு பரிசீலித்து வருகிறது.

9-05 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உருட்டாலையில் எவ்வளவு பேர் பணி யாற்றுகிறார்கள்? இது உருக்காலையாக மாற்றப்படுமானால் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கூடுதலாகக் கிடைக்கும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 1,397 பேர் இங்கே பணியாற்றி வருகிறார்கள். இது நாம் எதிர்பார்க்கிறபடி உருக்காலையாக மாற்றப்படுமேயானால், பன்மடங்கு அதிகமாகும்.